அம்பாறை நகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாறை நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உபபிரவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பாறை நகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நகர சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுதப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாயடவாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,566,615 பெறுமதியான நிலையான சொத்துக்கள், உரிய நிலையான சொத்துக்கள் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நிலையான சொத்துக்கள் கணக்கை 2025 ஆண்டின போது சரிசெய்வதென.	நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	மீளாயடவாண்டினுள் அமுல்படுத்தப்பட்ட LDSP மற்றும் PSDG செயற்திட்டங்களிற்குரியதாக ரூபா 30,286,340 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.	நிலையான சொத்துக்கள் இதுவரை மதிப்பீடு செய்திருக்கததுடன்எதிர் காலத்தில் நிர்மாணங்களை மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதென.	மூலதன செலவினத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருந்த கூட்டுத் தொகை ரூபா 39,566,324 ஆன 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதி உறுதிபாடுககள் சமர்ப்பிக்கப்டாததால் திருப்திகரமா ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.	நீண்ட காலமாக நிலவி வரும் மீதியொன்றாகும். கண்டறிவதை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கைகள் 2025 இறுதி கணக்கின் ஊடாக மேற்கொள்வதென.	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதி செய்யும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபை கட்டளை சட்டத்தின் (255 அத்தியாயம்)			
	170 ஆம் பிரிவு	நகர சபைக்குரிய ஆதனங்களிற்காக அறவிட வேண்டிய நிலுவை வீதவரி மற்றும் நகர சபைக்குரிய ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதில் அறவிட வேண்டிய ரூபா 4,752,948 வாடகை தொகையை அறவிட ஆதனத் தடை செய்து மேற்கொள்ள வேண்டிய முறைமைகளை செயற்படுத்துவதற்கு நகர சபையினால் செயற்பாடுகள் எடுத்திருக்கவில்லை.	கடையறைகளை முத்திரை இட்டு சபைக்கு ஒப்படைத்துக்கொண்டு உரிய உரிமை தரப்பினர்களிற்கு பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. சில நிலுவை கட்டணங்களை அறவிட சட்டரீதியான நடவடிக்கை எடுக்க அம்பாறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென.	நகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்..
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 880	நகர சபையின் காசாளர், பணம் மற்றும் காசோலை பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்கள், காசோலை ஒப்பமிடும் உத்தியோகத்தர்கள், களஞ்சிய பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான பரிசோதகர் ஆகிய பணம் மற்றும் சொத்துக்கள் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை தொகை பெற்றுக்கொள்ள	பதவிகளை அடிக்கடி மாற்றுவதுக்கு நேரிடுவதால் பிணை தொகை பெற்றுக் கொள்வதற்கு தடையாக உள்ளதென.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(இ)	பொது நிருவாக சுற்றறிக்கை			
	2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி	வாகனங்களின் எரிபொருள் பாவனை பரீட்ச்சிப்பு 12 மாதங்களிற்கு ஒருமுறை அல்லது 25000 கிலோ மீற்றர் தூரம் ஓட்டத்திற்கு பின்னர் ஏனும் மேற்கொள்ள வேண்டிய போதும் நகர சபைக்கு சொந்தமான பயன்பாட்டு நிலையில் உள்ள 08 வாகனங்களிற்கு எரிபொருள் பாவனை பரீட்சிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இங்க சில வாகனங்களினது மீற்றர் இல்லாது இருந்த வாகனங்களிற்கு மீற்றரிகளை பொருத்தி தற்போது உரிய பரீட்ச்சிப்பு மேற்கொள்ளப்பட்டள்ள துடன் மேலும் டேஷ் போட் இல்லாத வாகனங்களின் வெளியே மீற்றர்கள் பொருத்த நேர்ந்ததால் உரிய நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளதென.	சுற்றிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 2,489,573ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,008,803 ஆனது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

நகர முதல்வரினால் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

	2024	2023

	வருமான மூலங்கள்	மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	வீதவரி மற்றும் வரி	11,650,000	8,872,372	10,998,060	44,752,948	11,700,000	10,341,122	7,786,972	37,875,918
ii.	வாடகை	11,502,126	5,845,606	15,679,204	16,933,586	12,453,126	9,617,823	8,574,559	13,218,503
iii.	அனுமதிப்பத் திர கட்டணம்	2,402,000	17,637,211	1,763,721	-	3,302,000	1,475,065	1,475,065	–
iv.	ஏனைய வருமானம்	68,190,200	74,290,530	74,290,530	-	76,502,580	68,974,836	68,974,836	–
v.	**கூட்டுத் தொகை**	93,744,326	106,645,719	102,731,515	61,686,534	103,957,706	90,408,846	86,811,432	51,094,421

2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2024 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய வீதவரி மீதி ரூபா 44,752,948 ஆனதுடன் அது வருடாந்தம் அறவிட வேண்டிய மதிப்பீட்டு தொகை போன்று ஐந்து மடங்ககளுக்கு அதிக பெருமானமானது.	2024 இன் போது குறித்த ஆதன உரிமையாளர்களிற்கு 14 நாட்களிற்குள்ளே கொடுப்பனவு மேற்கொள்ளுமாறு பிடியாணை கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பின்னரும் கொடுப்பனவை மேற்கொள்ளாத தரப்பனர்களிற்கு சிவப்பு கட்டளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதென.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2028 ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 வரை நிலுவை கடையறை வாடகை மீதி தொடர்ந்து அதிகரக்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை கடையறை மீதி ரூபா 16,933,586 ஆனது.	2025 சனவரி முதல் கடையறை உடன்படிக்கைகளை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதென.	நிலுவை தொகையை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், பொது மக்களின் நல்வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

கணக்காய்வு அவதானிப்பு **சபையின் கருத்துரை** **பரிந்துரை**

	நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் துணைச் சட்டங்கள் விதிக்க வேண்டிய அனைத்து கடமைகளையும் இனங்கண்டு துணைச் சட்டங்கள் விதிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2024 திசெம்பர் 31 திகதி வரை 06 துணைச் சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்ட்டிருந்தன.	துணைச் சட்டங்கள் அங்கீகரித்துக் கொள்ளும் நடைமுறை பிரச்சினையொன்று காணப்படுகிறது. உள்ளூராட்சி அமைச்சினால் பொதுவான துணைச் சட்டக் கோவையொன்றை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென.	துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டு சபையின் நடவடிக்கைகள் சட்ட ரீதியாக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அம்பாறை நகர சபையினால் புத்த்ங்கள பாதை, திஸ்ஸபுர எனும் இடத்தில் நடாத்திச் செல்லும் திண்மக் கழிவு முகமைத்துவ நிலையத்திற்காக 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 கொண்ட நட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 இலக்க சுற்றாடல் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் 2024 திசெம்பர் 31 திகதி வரை சுற்றாடல் அனுமதிப் பத்திமொன்றை பெற்றிருக்கவில்லை.	2020 மார்ச் மாதம் முதல் ஆரம்பமான கொரோனா தொற்று காரணமாக உக்கலடையும் ம்ஷ்ற்றும் உக்கலடையாத கழிவுகைளை பிரிக்காதிருக்க எடுக்கப்பட்ட தீர்மானம் மீது இது வரை திண்மக் கழிவு முகாமைத்துவ அலகு மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் இயலுமை இல்லாததுடன், மீண்டும் திண்மக் கழிவு முகாமைத்துவ அலகை ஆரம்பித்த பின்னர் அதற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை நடவடிக்கை எடுப்பதென.	சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை விரைவில் பெற்றுக் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் மதுசாரச் சாலை, வாடிவீடு மற்றும் விழா மண்டங்களினால் ரூபா 61,244,551 தொகை ஈட்டப்பட்டிருந்தது. 09 ஊழியர்கள் இந்த இடங்களில் கடமைபுரிவதுடன் அந்த இடங்களில் பயன்படுத்தப்படும் புத்தகங்கள் மற்றும் எனைய ஆவணங்கள் உரிய மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை.	குறித்த இடங்களை கணக்காளர் மற்றும் வருமான பரிசோதகரினால் அவ்வப் போது பரீட்சிக்கப்படுவதுடன் 4 வருமான பரிசோதகர்களின் சேவை தேவையாகவுள்ள நகர சபைக்கு ஒரு வருமான பரிசோதகர் மாத்திரம் இருப்பதால் போதியவாறு குறித்த பரீட்சிப்புக்களை மேற்கொள்ள முடியதிருப்பதென.	சரியான கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை விரைவில் உருவாக்க வேண்டும்.

(இ)	பொது மக்கள் பூங்காவை நவீனமயமாக்கும் செயற்திட்டம் மூலம் எஞ்சிய ரூபா 5.5 மில்லியனால் அங்கீகாரமின்றி தளவாடங்களை கொள்வனவு செய்து தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.	செயற்திட்டத்தின் PT2 கீழ் மொத்தமாக ரூபா 5.69 மில்லியன் அளவான காசு எஞ்சியதுடன் அத்தொகையை பயன்படுத்தி பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.	பயன்படுத்தாத பண்டங்களை விரைவில் பயன்படுத்த வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நகர சபை அதிகார பிரதேசங்களிலுள்ள ஆதனங்களின் மீது 2005 ஆண்டில் மேற்கொண்ட மதிப்பீட்டின் மீது 2024 ஆண்டிற்கு வரி அறவிடப்பட்டிருந்தது.	2026 ஆண்டு முதல் புதிய மதிப்பீட்டின் மீது குறித்த வீதவரியை அறவிட முடியுமென.	காலாரீதியாக மதிப்பிட்டு வரித் தொகை அறவிட வேண்டும்.

3.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நகர சபைக்கு சொந்தமாக காணப்படும் திருத்த முடியாத நிலையில் காணப்படும் 12 வாகனங்களை உரிய முறைமையை பயன்படுத்தி ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்காததால் துருப்பிடித்த வன்னம் காணப்பட்டன.	நகர சபைக்கு சொந்தமாக சில காலமாக திருத்த முடியாத நிலையில் காணப்படும் பல வாகனங்கள் உள்ளதுடன் அந்த வாகனங்களை எதிர்காலத்தில அங்கீகார முறைமையை பின்பற்றி விரைவில் ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுப்பதென.	விரைவில் ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபைக்கு சொந்தமான 42 காணிகள் மற்றும் அந்த காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதியை இனங்கண்டு அட்டவணை தயாரிப்பதற்கு மற்றும் சொத்துக்கள் பதிவேட்டில் பெறுமதியை உட்படுத்தி நாளாதுவரையாக பேணிச்செல்ல நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நகர சபைக்கு சொந்தமான பெரும்பாலான காணி மற்றும் கட்டிடஙகளிற்காக நகர சபையின் பெயரில் உறுதி இல்லாதுடன் அதனால் அவைகளை மதிப்பீடு செய்யும் பிரச்சினை காணப்படுகின்றது. குறித்த ஆதனங்களிற்காக உறுதி தயாரிப்பதற்கு தற்போது சில காணிகள் நிலஅளவை நடவடிக்கைகள் மேறகொள்ளப்படவதுடன் அதற்காக நீண்ட காலம் செலவாவதென.	ஆதனங்களை சுவீகரிப்பு செய்து பெறுமதியை இனங்கண்டு ஆவணப்படுத்த மற்றும் கணக்கிடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நகர சபைக்கு சொந்தமாக காணப்படும் 14 வாகனங்களின்	தற்போது ஓட்டத்திற்கு பொருத்தமான 4	வாகனங்களின் உரிமையை

உரிமையை நகர சபையின் பெயரிற்கு சுவீகரித்துக் கொள்ள கணக்காய்வு திகதி வரையும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வாகனங்களை எதிர்காலத்தில் சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் எஞ்சிய வாகனங்களை பல காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றிருந்ததால் அந்த வாகனங்களை சுவீகரித்திக் கொள்ள வருமான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு புகை அறிக்கை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.	சுவீகரித்திக்கொண்டு திருத்துவதற்கு அல்லது பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேணடும்.

3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நகர சபையில 08 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது.	அங்கீகார வருமான கட்டுப்பாட்டாளர் 4 பதவிகள் காணப்பட்ட போதும் தற்போது ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் கடமையாற்றுவதென.	வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ஊழியர் கடன் பதிவேடு பிரகாரம் ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய 07 கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 924,762 தொகை ஓராண்டிக்கு அதிக காலம் அறவிடப்படாது காணப்பட்டது.	மரணித்த ஊழியரின் கடனை அறவிட அவரின் கோரப்படாத சான்தழில் குறித்த கடன் மீதி உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சேவையை விட்டுச் சென்ற அறிவித்தல் விடுத்துள்ள ஊழியர்களிற்காக அவர்களின் பிணையாளர்களிடமிருந்து கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஒரு சில சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களினால் குறித்த கடன் மீதிகளை மாதாந்தம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென.	நிலுவை மீதியை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.7 வாகன தொகுதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நகர சபைக்கு சொந்தமான பயன்படுத்தும் நிலையில் காணப்படும் 24 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் காப்புறுதி சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சபைக்கு சொந்தமான ஓட்ட நிலையில் உள்ள அனைத்து வாகனங்களிற்கும் காப்புறுதி சான்றிதழ்களை தற்போது பெற்றுக் கொண்டுள்ளதுடன் ஓட்ட நிலையில் உள்ள முக்கிய சில வாகனங்களிற்காக வருமான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டுள்ளதென.	வருடாந்தம் காப்புறுதி சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவின் மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) பிரகாரம் உள்ளக கணக்காய்வு மூலம் நிருவன செயற்பாட்டு செயன்முறைமைகளை மேப்படுத்துவதற்கு மற்றும் செயலாற்றுகையை உயர்த்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	3 மாதங்களிற்கு ஒரு முறை உள்ளக கணக்காய்வு குழு ஒன்றுகூடுவதுடன் அங்கு உள்ளக கணக்காய்வு மேற்கொண்டு குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுருத்தப்படுகின்றனர். அதை எதிர்காலத்தில் ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதென.	தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நகர சபையின் அனைத்து கடமைகளும் மேவுகை செய்யப்படும் வகையில் நிறுவன செயற்பாட்டு செயல்முறைகளை மேம்படுத்துவது மற்றும் செயலாற்றுகை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.2 கணக்காய்வுக் குழு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆம் திகதிய இலக்கம் DMA/01–2019 கொண்ட உள்ளக கணக்காய்வு வழியாட்டி மீதான சுற்றறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரையும் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இஸ்தாபித்து குழுக்கூட்டம் நடாத்தியிருக்கவில்லை.	எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இஸ்தாபிக்கப்பட தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதென.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இஸ்தாபிக்கப்பட்டு கூட்டங்களை நடாத்த முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 இலக்கம் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தேவையான தரவுகளை சேகரித்து அதற்கு தேவையான நிதிஏற்பாடு வழங்குவதற்கு சபையினால் போதுமான நவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.	2025 பாதீட்டை தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளும் விதத்தில் நிதிஏற்பாடு ஒதுக்கப்ட்டுள்ளதென.	சுற்றறிக்கை பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தேவையான தரவுகளை சேகரித்து அதனூடாக தேவையான நிதிஏற்பாட்டை வழங்குவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.